(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 5(2).]

# பாராளுமன்றம்

## 5 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2012 சனவரி 20, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2012 பெப்புருவரி 08, புதன்கிழமை

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— பொது வழிகள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடனும் 2008 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பொது வழிகள் சட்டத்தின் 13 ஆம் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 89 ஆம் பிரிவின் (2) ஆம் பந்தியின் (இ) என்னும் உட்பந்தியின் கீழ், பாவனையாளர் கட்டண தேசிய பெருவழியில் பயன்படுத்தப்படும் ஒவ்வொரு வாகனத்தினதும் சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்கள் தொடர்பில் சனாதிபதியால் ஆக்கப்பட்டு 2011 நவெம்பர் மாதம் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2012.01.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

## 2012 பெப்புருவரி 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1132/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அதிகூடுதலான மின்சார விலைகள் நுகர்வோருக்கு எப்போது குறைக்கப்படும் என்பதையும்;

(ii) இலங்கை மின்சார சபையினாலும் தனியார் துறையினாலும் அடுத்துவரும் 10 வருடங்களில் ஆரம்பிக்கப்படவுள்ள புதிய மின்வலுப் பிறப்பாக்கக் கருத்திட்டங்களையும்;

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்திட்டங்களினால் பிறப்பிக்கப்படும் மின்வலு அலகிற்கான எதிர்பார்க்கப்படும் செலவினையும்;

(iv) மேற்கூறிப்பிடப்பட்டவாறாகாப் பிறப்பிக்கப்பட்ட மின்வலு அலகின் சராசரி விற்பனை விலையினையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) இலங்கை மின்சார சபை அதன் தேவைக்கு அதிகமாகப் பணியாளர்களைக் கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் நிலைமையினைச் சீர்படுத்துவதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கையினையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1400/ '11

கௌரவ புத்திக பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலியில் இருந்து மாத்தறை வரையிலான புகையிரதப் பாதை நவீன மயமாக்கப்பட்டுள்ள போதிலும், அப்பாதையில் பெரும் எண்ணிக்கையிலான புகையிரதக் குறுக்கு வீதிகளில் பாதுகாப்புக் கடவைகளும் சமிக்ஞை விளக்குகளும் பொருத்தப்படாமை காரணமாக அப்பிரதேச மக்களின் வாழ்க்கை கடும் அபாயநிலைக்கு உள்ளாகியுள்ளதென்பதை அவர் ஏற்றுக்கொள்கிறாரா?

(ஆ) (i) அவ்விடங்களில் பாதுகாப்புக் கடவைகளையும் சமிக்ஞை விளக்குகளையும் பொருத்த நடவடிக்கை எடுப்பாரா;

(ii) இதற்காக ஏற்கெனவே திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவா;

(iii) ஆமெனில், அவற்றின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1492/ '11

கௌரவ அஜித் குமார,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1693/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— பிரதம அமைச்சரும் , பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவையின் தலைவர் யார்;

(ii) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவை மூலமாக ஒவ்வொரு நிறுவனத்திற்கும் பாதுகாப்பு வழங்கப்படுகின்ற வருடாந்த விலைகள் தனித்தனியாக யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது;

(iv) 'றக்னா லங்கா' பாதுகாப்புச் சேவையில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்காக சேவைபெறுநர்கள் செலுத்துகின்ற பணத்திலிருந்து 'றக்னா லங்கா' நிறுவனம் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்குச் செலுத்துகின்ற பணத் தொகை யாது;

(v) 'றக்னா லங்கா' நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற அனைவரும் அரச பாதுகாப்பு சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களா;

என்பதை அவர் இக் கௌரவ சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1719/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாணப் பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்குரிய நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமித்த அதிகாரி யார் என்பதையும்;

(iii) பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கும் செலுத்தப்படுகின்ற சம்பளம் அல்லது கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், தொலைபேசிகள் உள்ளிட்ட வசதிகள் தனித் தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1727/ ’11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹிங்குரான சீனித்தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும் கரும்புப் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் மத்தியில் உடன்படுக்கையொன்று உள்ளதா;

(ii) அவ்வாராயின் அந்த உடன்படிக்கையை சபையில் சமர்ப்பிப்பாரா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) கரும்புப் பயிர்ச் செய்கையாளர்கள் இக்காணிகளில் கரும்பு பயிரிட மறுக்கின்றனர் என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) இக்கரும்பு ப் பயிர்ச் செய்கையாளர்களின் கோரிக்கைகள் யாவை;

(ii) இக்கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வுகளை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா;

(iii) அவ்வாராயின் அத்திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1860/ ’11

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வவுனியா கோவில்குளம் கிராமத்தில் பாலர் பாடசாலையொன்றுக்கான கட்டடமொன்றை நிர்மாணித்ததாக பொய்யான தகவல்களைத் தெரிவித்து, மேற்கொள்ளப்படாததொரு நிர்மாணிப்புக்கு வவுனியா நகர சபை ரூபா 177,180.66 பணத்தை மோசடியான முறையில் வழங்கியுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) குறித்த பணத்தைப் பெற்றுக்கொண்டவர் யார் என்பதையும்;

(ii) மேற்படி மோசடியைப் புரிந்த நபரிடமிருந்து குறித்த பணத்தை மீள அறவிட நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

அவர் குறிப்பிடுவரா?

(இ) இன்றேல் ஏன்?

1873/ ’11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் ஊடாக தூதுவராலய பணிகளில் ஈடுபடும் நபர்களின் பிரத்தியேக பிரயாணப் பொதிகளின் நெறிப்படுத்துதலை மேற்கொள்கின்ற நிறுவனம் யாது;

(ii) மேற்படி நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கையில் முறைசார்ந்த கேள்விப் பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டதா ;

(iii) ஆமெனில், மேற்படி பிரயாணப் பொதிகளை நெறிப்படுத்திய நிறுவனத்தை நீக்கிவிட்டு, பிறிதொரு நிறுவனத்துக்கு கையளிக்கப்பட்டதன் அடிப்படை யாது;

(iv) கடந்த வருடத்தினுள் மேற்படி கருமத்துக்காக புதிய நிறுவனத்துக்கு செலுத்தப்பட்ட பணத்துக்கும், இதற்கு முன்னர் இயங்கிய தனியார் நிறுவனத்துக்கு ஒரு வருடத்துக்காக செலுத்தப்பட்ட பணத்துக்கும் இடையிலான வித்தியாசம் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1912/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) கொழும்பில் சேரிப்புறங்களில் வாழ்கின்ற மக்களது குடியிருப்புப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ரியல் எஸ்டேட் எக்ஸ்சேன்ஜ் (பிரைவேட்) லிமிடெட் (REEL) ஆனது நகர அபிவிருத்தி அதிகார சபை (UDA), ஸ்ரீ லங்கா வீதி அபிவிருத்திக் கம்பனி (SLRDC), தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை (NHDA), கொழும்பு மாநகர சபை (CMC) ஸ்திரமான நகராட்சி நிகழ்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றுடன் கூட்டிணைக்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) 2006 முதல் இற்றை வரையில்,

(i) 'ரீல்' (REEL) இனது பணிப்பாளர்கள், தவிசாளர்கள், பிரதான கணக்கீட்டு அதிகாரிகள் யார் என்பதையும்;

(ii) திறைசேரி, அரச வங்கிகள், அல்லது அரச நிறுவனங்கள் ஆகியவற்றினால் 'ரீல்' இற்கு மாற்றம் செய்யப்பட்ட பணம் தொடர்பான விபரங்களையும்;

(iii) ஒவ்வொரு மாற்றத்தின் நோக்கம் எதிர்வு கூறப்பட்ட விளைவுகள், உண்மையில் கிடைத்த விளைவுகள் ஆகியனவற்றையும்;

(iv) ரூ. 5 மில்லியனுக்கு மேற்பட்ட செலவினங்கள் பற்றிய விபரங்கள் மற்றும் ஒவ்வொன்றையும் அங்கீகரித்தமைக்கான நோக்கம் ஆகியவற்றையும்

(v) 'ரீல்' (REEL) இன் தற்போதைய நிதி நிலைமை என்னவென்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) 2010 சனவரி முதல் இற்றை வரை 'ரீல்' தொடர்பான ஏதாவது வீண்செலவுகள், மோசடிகள், மற்றும் அல்லது ஊழல்கள் பற்றிய ஏதாவது உள்ளக விசாரணைகள், கணக்காய்வுகள், அல்லது குற்றவியல் புலனாய்வுகள் மேற்கொள்ளப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆம் எனில் அவற்றின் விளைவுகளையும்;

(iii) மேற்படி (ஆ) (i) இல் கண்டறியப்பட்ட முறைகேடுகள் தொடர்பில் பிரேரிக்கப்பட்ட பரிகார நடவடிக்கைகளையும் அவை மேற்கொள்ளப்பட்ட திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1913/ '11

கௌரவ நிரோஷன் பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் மாவட்டத்தின் மாரவில அரசாங்க வைத்தியசாலையின் பிரேதஅறையில் குளிரூட்டல் வசதிகள் இல்லை என்பதை அவர் அறிவாரா?

(i) மேற்படி வைத்தியசாலைக்கென குளிரூட்டல் அறையொன்றை நிர்மாணிக்க திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், மேற்படி குளிரூட்டல் அறையை நிர்மாணிக்க மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) எவ்வளவு காலத்தினுள் மேற்படி குளிரூட்டல் அறையை நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி வைத்தியசாலையில் கடமையாற்றுகின்ற சட்ட மருத்துவ உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அரசாங்க விடுமுறை தினத்தில் அல்லது சட்ட மருத்துவ உத்தியோகத்தர் லீவு பெற்றுள்ள சந்தர்ப்பத்தில் மேற்படி வைத்தியசாலையில் மரண விசாரணை மேற்கொள்ளப்படுவதில்லை என்பதனால், குளிரூட்டல் அறை வசதிகள் இல்லாத மேற்படி வைத்தியசாலையில் பிரேதங்களை பழுதடையாது வைத்திருப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1914/ '11

கௌரவ அஜித் பீ.பெரேரா,— பிரதம அமைச்சரும் புத்தசாசன, மத அலுவல்கள் அமச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பொலிஸ் நிலையம் அமைந்துள்ள தற்போதய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) மேற்படி கட்டிடம் தற்போது சிதைவடைந்துள்ளதை அறிவாரா

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பண்டாரகம பொலிஸ் நிலையத்தின் பணிகளை ஒழுங்கான விதத்தில் முன்னெடுத்து செல்வதற்காக போதியளவு வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1978/ '11

கௌரவ ஆர்.எம். ரஞ்ஜித் மத்துமபண்டார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்தின், புத்தள பிரதேச செயலாளர் பிரிவில், கல்டம்மண்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் டீ. எம். பியதாஸ, டீ.எம். குணதாஸ, ஆர்.எம். அமரதாஸ, ரீ.ஏ. சரத், எம்.பீ.குணபால, டீ.எம். ரத்னசிறி, டீ.எம். சரத், ஜே.எம். பிரேமலதா மற்றும் எச்.எம் குணசேகர ஆகியோர் சமுர்த்தி நிவாரணம் பெற்ற குறைந்த வருமானம் பெறுவோர்கள் என்பதையும்;

(ii) தற்போது இவர்களின் சமுர்த்தி நிவாரணம் நீக்கப்பட்டுள்ளதென்பதையும்:

அவர் அறிவாரா?

(ஆ) சமுர்த்தி நிவாரணத்தை இழந்துள்ளமையினால் மிகவும் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள இவர்களுக்கு மீண்டும் சமுர்த்தி நிவாரணத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1989/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சாவகச்சேரி நகரசபை பிரதேசத்தில் அமைந்துள்ள 12 பாடசாலைக்குச் சொந்தமான மலசல கூடங்களின் கழிவுகளை அகற்றுவதற்கு சாவகச்சேரி நகரசபை தவறியுள்ளதென்பதையும்;

(ii) இந்நிலைமை தொடர்பாக சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் நிர்வாகத்தினர் நகரசபைக்கு அறிவித்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இப்பிரச்சினைக்குரிய நிலைமையை தீர்ப்பதற்காக சாவகச்சேரி நகரசபைக்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி அப்பாடசாலைகளுக்கு நகரசபையினால் வழங்கக் கூடிய அனைத்து வளங்களையும் உரிய முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1994/ '11

கௌரவ திலங்க சுமதிபால,— பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர், அவ்வலுவலகத்தில் கடமைகளை ஆரம்பித்த திகதி யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பிரதேச செயலாளரின்,

(i) முதல் நியமனத் திகதி மற்றும் கடமையாற்றிய இடம் யாது;

(ii) இலங்கை நிர்வாகச் சேவையில் தரம் யாது;

(ii) பதவி வகிக்கும் அடிப்படை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) உத்தியோகத்தர்கள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக இப்பிரதேச செயலாளர், மாவட்ட செயலாளரிடத்திலும் ஆளுநரிடத்திலும், இதுவரை செய்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பிரதேச செயலாளருக்கும் மேற்படி அலுவலகத்தின் கிராம உத்தியோகத்தர்களுக்கும் எதிராக, மாவட்ட செயலாளருக்கும் ஆளுநருக்கும் மற்றும் பொது நிர்வாக அமைச்சுக்கும் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாது;

(iii) பிரதேச செயலாளருக்கு எதிரான முறைப்பாடுகள் சுருக்கமாக யாவை;

(iv) முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ள கிராம உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களின் பிரிவுகள் யாவை;

(v) மேற்படி முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) (i) மேற்படி பிரதேச செயலாளர், மாகாணக் காணி ஆணையாளருக்கு எதிராக கிழக்கு மாகாண ஆளுநரிடத்தில் செய்துள்ள முறைப்பாடு யாது;

(ii) அது தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டுள்ளதா;

(iii) அதன் விதப்புரைகள் யாவை;

(iv) தற்போது, அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

2007/ '11

கௌரவ வசந்த அளுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை போக்குவரத்து சபையின் சேமலாப நிதியத்திலிருந்து முன்னர் பல சந்தர்ப்பங்களில் சட்ட விரோதமாக, சேவை வழங்குனர்களின் உபயோகத்துக்காக நிதி பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) மீண்டும் அவ்வாறு நிதி பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்;

(iii) இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த ஊழியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) மேற்படி நிதியத்தை இலங்கை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(ஆ) (i) 1991 ஆம் ஆண்டில் இ.போ.ச. மக்கள்மயமாக்கப்பட்ட கம்பனியாக மாற்றியமைக்கப்பட்டபோது அதன் சேமலாப நிதியத்தில் காணப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) இதனை அடுத்து, அதன் மூலம் நலவுரிமைகளைப் பெற்று அங்கத்துவத்திலிருந்து நீங்கியவர்களின் எண்ணிக்கை மற்றும் இவர்களுக்குச் செலுத்தப்பட்ட பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்;

(iii) தொடர்ச்சியாக மேற்படி நிதியத்தில் அங்கத்துவம் வகித்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயரில் மீதியாக இருந்த பணத் தொகைகள் எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) சேவை வழங்குனர் மேற்படி நிதியத்திலிருந்து அடிக்கடி பெற்றுக் கொண்டுள்ள பணத் தொகை மற்றும் நிதி பெற்றுக் கொள்ளப்பட்டதன் அடிப்படை யாது என்பதையும்;

(ii) பெறப்பட்ட பணத் தொகை மீளளிப்புச் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி நிதியம் இலங்கை மத்திய வங்கியின் கீழ் கொண்டுவரப்படுமெனில், இது வரைகாலம் ஊழியர்கள் பெற்றுவந்த சிறப்புரிமைகளை இழக்க நேரிடுமா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், மேற்படி சிறப்புரிமைகளை பாதுகாப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2012 பெப்புருவரி 10, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1306/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த 10 வருடங்களாக நாட்டுக்கு கிடைத்த அனுப்பு தொகைகளை அமெரிக்க டொலர்களிலும் இலங்கை ரூபாவிலும் வெவ்வேறாகவும்,

(ii) அந்த அனுப்பு தொகைகள் எந்த நாடுகளிலிருந்து பெறப்பட்டனவோ அவற்றின் பெயர்களையும்;

(iii) மேற்குறிப்பிட்ட நாடுகளில் இருந்து கடந்த 5 வருடங்களாக ஒவ்வொரு நபரிடமிருந்தும் பெறப்பட்ட சராசரி வைப்பினை வருட அடிப்படையிலும் நாட்டின் அடிப்படையிலும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வெளிநாட்டு ஒதுக்கங்களைப் பாதுகாப்பதற்கு உதவுகின்ற பிரசைகளுக்கு வழங்கப்படுகின்ற நன்மைகளையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

1493/ '11

கௌரவ அஜித் குமார,— மீள்குடியேற்ற அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மீள்குடியேற்ற அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1567/ '11

கௌரவ புத்திக பதிரண,— துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அம்பாறை மாவட்டத்துக்குரிய மஹஓய பிரதேச செயலாளர் பிரிவில் மஹஓயவிலிருந்து பொல்லேபெத்த வரையிலான வீதியை இணைத்து அமைக்கப்பட்டுள்ள இரும்பினாலான பாலம் சிதைவடைந்துள்ளதால் மக்கள் கடும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி பாலத்தின் புனரமைப்புப் பணிகளை துரிதமாக ஆரம்பிப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(iii) அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், ஒதுக்கப்பட்டுள்ள பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1612/ '11

கௌரவ ஈ.சரவணபவன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யாழ்ப்பாண மாநகர சபையின் நகரபிதா, சபையின் அனுமதியின்றி தான்தோன்றித்தனமான முடிவுகளை எடுத்து, யாழ்ப்பாண நகரின் சதுப்பு நிலப் பகுதியொன்றில், நான்கு மாடிகளைக் கொண்ட வர்த்தகக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு தனியார் வர்த்தகரொருவருக்கு அனுமதி வழங்கியுள்ளார் என்பதையும்;

(ii) யாழ்ப்பாணத்தின் முன்னாள் நகரபிதாவான காலஞ்சென்ற திரு. ரவிராஜ், மேற்படி சதுப்பு நிலப் பகுதியில் மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக முன்வைத்த பிரேரணையை, மண் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சாத்தியக்கூறு அறிக்கையின் விதப்புரைகள் காரணமாக செயற்படுத்தவில்லை என்பதையும்;

(iii) எந்தவிதமான மண் பரிசோதனையும் மேற்கொள்ளப்படாது, மேற்படி சதுப்பு நிலத்தில், தற்போது நான்கு மாடிக் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்படுகின்றது என்பதையும்;

(iv) மேற்படி நிர்மாணிப்பு, பிற்காலத்தில் உயிர் மற்றும் சொத்திழப்புகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமையலாம் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் முன்னதாக, இதை நிர்மாணிப்பவர் சில வர்த்தக நிலையங்களை விற்பனை செய்துள்ளார் என்பதையும்;

(ii) இதில், ரூபா 19,000,000 க்கு விற்பனை செய்யப்பட்ட வர்த்தக நிலையங்களுக்கு ரூபா 11,000,000க்கு மாத்திரம் உறுதிகளை எழுதி, முற்பணமாக ரூ. 50,000 வீதம் பெறப்பட்டுள்ளது என்பதையும்;

(iii) இதன்மூலம், மாநகர சபைக்கு வருமான இழப்பும் வருமான வரி மோசடியும் நடைபெற்றுள்ளது என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) மேற்கூறப்பட்ட நிலைமையைத் தடுப்பதற்காக ஆரம்பகட்ட விசாரணையை நடத்தி, உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1694/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'லங்கா புத்ர வங்கி' தாபிக்கப்பட்டதன் நோக்கம் யாது;

(ii) இவ்வங்கி தாபிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரை கடன் வழங்கப்பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை மற்றும் கடன் தொகை யாது;

(iii) 2011 ஆம் ஆண்டு வரை கடன் மீள்அறவிடல் வீதம் யாது;

(vi) 50 மில்லியனுக்கு மேல், 100 மில்லியனுக்கு மேல் மற்றும் 200 மில்லியனுக்கு மேல் எனும் பெறுமானங்களில் கடன் வழங்கப்பட்டோரின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1720/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்குரிய நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் யாவர் என்பதையும்;

(ii) மேற்படி செயற்பாட்டுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமித்த அதிகாரி யார் என்பதையும்;

(iii) செயற்பாட்டுப் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் கல்வித் தகைமைகள் மற்றும் தொழில்சார் அனுபவம் யாதென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு பணிப்பாளர் சபை அங்கத்தவருக்கும் செலுத்தப்படுகின்ற சம்பளம் அல்லது கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள வாகனங்கள், தொலைபேசிகள் உள்ளிட்ட வசதிகள் தனித் தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1861/ '11

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) டெங்கு ஒழிப்பின் பொருட்டு வட மாகாண ஆளுநரினால் வவுனியா நகர சபைக்கு 2009 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) அப்பணத் தொகை செலவிடப்பட்டமை தொடர்பான கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்கள் இதுவரை நகரசபைக்கு சமர்ப்பிக்கப்படாமைக்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி கணக்கு அறிக்கைகள் மற்றும் விபரங்களை நகரசபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1874/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாபிட்டி நகரில் அமைந்துள்ள இலங்கை மின்சார சபையின் வடமேல் மாகாண அலுவலுகத்திற்கு சொந்தமான மூன்று மாடி கட்டிடத்தின் இடப்பரப்பு சதுர அடிகளில் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கட்டிடத்தில் அலுவலக பணிகளுக்கு மாத்திரம் உபயோகிக்கப்படும் இடப்பரப்பு எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கட்டிடத்தினுள் அலுவலக பணிகளுக்காக போதுமான இடவசதி இருக்கும் பட்சத்தில் கட்டிடத்தின் முன்பாக உள்ள பிரிதொரு கட்டிடத்தை அதிக தொகை செலுத்தி மின்சார சபை வாடகைக்குப் பெற்றுள்ளதற்கான காரணம் யாதென்பதையும்;

(iv) குளியாபிட்டி தேர்தல் தொகுதியினுள் இலங்கை மின்சார சபையினால் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய கட்டிடங்கள் யாவை என்பதையும்;

(v) கடந்த மூன்று வருட காலத்திற்காக மேற்படி ஒவ்வொரு கட்டிடத்திற்கும் செலுத்தப்பட்ட வாடகை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1910/'11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அனர்த்த முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சின் செயலாளர் திருமதி எம்.எஸ். மொஹமட் 2011 மே மற்றும் ஜுன் மாதங்களில் பெற்ற சம்பளங்கள் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) திருமதி மொஹமட் 2011 செப்தெம்பர் மாதம் பெற்ற சம்பளம் எவ்வளவு என்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் செயலாளரின் சம்பள ஏற்றம் அதிகரிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அமைச்சின் செயலாளரது சாரதிக்கு 2011ஆம் ஆண்டில் சம்பள ஏற்றம் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில் வழங்கப்பட்டுள்ள சம்பள ஏற்றங்களின் பெறுமதி எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டு சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதன் அடிப்படை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1915/ '11

கௌரவ அஜித் பீ.பெரேரா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005, 2006, 2007, 2008, 2009, 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பல்கலைக்கழகங்களிலிருந்து பட்டங்களைப் பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பல்கழைக்கழகங்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மேற்படி பட்டதாரிகளில் உள்ளக மாணவர்கள் மற்றும் வெளிவாரி மாணவர்கள் என்ற வகையில் பட்டம் பெற்றவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) வெளிவாரி பட்டப் பாடநெறிகள் தொடர்பாக அரசின் கொள்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1990/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பதுளை மாவட்டத்தின் வியலுவ பிரதேசத்தில் அமைந்துள்ள கலஉட என்ற கிராமத்துக்கு இதுவரை குழாய் நீர் வசதிகள் வழங்கப்படாத காரணத்தினால் அப்பிரதேச மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதையும்;

(ii) குழாய் நீர் விநியோகத்தை வழங்கி தமது குடி நீர் தேவையை பூர்த்தி செய்து தருமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பண்டாரவளைக் கிளைஅலுவலகத்திற்கு அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) கலஉட பிரதேசத்தில் வசிக்கும் 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்குத் தேவையான குடி நீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக குழாய் நீர் வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2001/ '11

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்துமபண்டார,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தள நகரில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய பிரதேச சபைக் கட்டடிடத்தில் அமைந்துள்ள 17 விற்பனைக் கூடங்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனத்தின் மீன் விற்பனைக் கூடத்திற்காக ஒதுக்கப்பட்ட 11 ஆம் இலக்க விற்பனைக் கூடத்தைத் தவிர, இலக்கம் 4 தொடக்கம் இலக்கம் 17 வரையுள்ள விற்பனைக் கூடங்கள் அனைத்தும் கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டு விற்பனைக் கூடமொன்று ரூபா 20 இலட்சம் வீதம் வழங்கப்பட்டதென்பதையும்;

(ii) 1,2,3 ஆம் இலக்க விற்பனைக் கூடங்கள் சபையின் எதிர்கால தேவைக்காகப் பயன்படுத்தும் பொருட்டு கேள்விப் பத்திரம் மூலம் வழங்காமலிருப்பதற்கு சபையின் மாதாந்த கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதென்பதையும்;

(iii) பின்னர் மேற்படி மூன்று விற்பனைக் கூடங்களுக்காக தமது நண்பர்கள் சமர்ப்பித்த ஒரு விற்பனைக் கூடத்திற்கு ரூபா 10 இலட்சம் போன்றதொரு ஆகக்குறைந்த பெறுமதியைக் கொண்ட கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டனவென்பதையும்;

(iv) வெளிப்படைத்தன்மையின்றி மேற்கொள்ளப்பட்ட மேற்படி கேள்விப் பத்திரம் கோரலால் மேற்படி பிரதேச சபைக்கு கிடைக்க வேண்டிய பெருமளவு வருமானம் இழக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) மேற்படி மோசடியான கேள்விப் பத்திரம் கோரலின் ஊடாக பெருமளவு நிதி மோசடி இடம்பெற்றுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி கேள்விப் பத்திரம் கோரல் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை ஒன்றை நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2042/ '11

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 ஆம் ஆண்டில்,

(i) சமுர்த்தி வேலைத்திட்டத்தின் கீழ் சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) முழு நாட்டிலும் சமுர்த்தி நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) சமுர்த்தி திட்டத்தில் முன்னோடிகளாகச் சேவையாற்றிய சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் கொடுப்பனவுகளுக்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2057/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் சேமலாப நிதியினால் கடந்த இரண்டு வருடங்களாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட பட்டியலிடப்பட்ட பங்குகளின் சகல கொள்வனவுகள் மற்றும் விற்பனையினையும் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) ஒவ்வொரு பரிமாற்றத்திற்கும் பொறுப்பான தரகர்களின் பெயர்களையும்;

(iii) தரகுக் கட்டணங்களை வெவ்வேறாகக் குறிப்பிட்டு ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கான செலவினையும்;

(iv) மேற்குறிப்பிட்ட 2 வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பங்குத் தரகர் கம்பனிக்கும் செலுத்தப்பட்ட தரகுக் கட்டணத்தினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) மேலே (அ) (i) இல் தரப்பட்ட ஒவ்வொரு பங்குகளின் கொள்வனவு அல்லது விற்பனைக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய மற்றும் கொள்வனவு அல்லது விற்பனையிலிருந்து இரண்டு வாரங்களில் சந்தை நிறைவு பெறும் போதிருந்த விலையை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2066/ '11

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திரு. பஸ்தியாம்பிள்ளை ஜோசப் பீற்றருக்குச் சொந்தமான பீற்றர்ஸ் பண்ணை தச்சன்குளம், வவுனியாவில் உள்ள பத்து ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி (துண்டு இல. 797, காட்டப்பட்ட பட இலக்கம்: 7 SP 4739) வவுனியா விமான நிலைய விஸ்தரிப்புக்காக 1986 இல் சுவீகரிக்கப்பட்டது என்பதையும்;

(ii) 1986 இல் சுவீகரிக்கப்பட்ட காணிக்கான நட்டஈடு இன்னும் செலுத்தப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) திரு.பஸ்தியாம்பிள்ளை காலம் சென்றுவிட்டதால் மேற்படி நட்டஈட்டை அவரின் மனைவிக்கும் மகளுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2012 பெப்புருவரி 21, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1405/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டமூலம் எப்போது சமர்ப்பிக்கப்பட்டு சட்டமாக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையையும்;

(iii) முதலீட்டின் பெறுமதி, தொழில் வழங்கும் இயலளவு மற்றும் மேற்கொள்ளப்படவுள்ள உற்பத்தி அல்லது சேவை ஆகியவற்றுடன் அந்தக் கருத்திட்டங்களின் பெயர்கள் மற்றும் மூல நாடுகள் ஆகியவற்றை வெவ்வேறாகவும்;

(iv) அவை ஆரம்பிக்கப்பட்ட ஆண்டிலிருந்து வருடாந்த விற்பனைப் புரழ்வு மற்றும் ஒவ்வொரு முதலீட்டாளரினாலும் வருடாந்தம் செலுத்தப்படவுள்ள தீர்வை ஆகியவற்றை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2006ஆம் ஆண்டின் 10ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சேர் பெறுமதி வரிச்சட்டம், 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க நிதிச் சட்டம், 1978 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம், 2006 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி சேவை அறவீட்டுச் சட்டம், 2002 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பற்று வரிச்சட்டம், (235 ஆம் அத்தியாயமான) சுங்கக் கட்டளைச்சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் மேற்படி சட்டத்தின் மூலமாக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புகளை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1494/ '11

கௌரவ அஜித் குமார,— சமூக சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சமூக சேவைகள் அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1568/ '11

கௌரவ புத்திக பத்திரண,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முகாமைத்துவ உதவியாளர் சேவையின் உயர் வகுப்பு உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட மேலும் 85 சேவைகளின் உத்தியோகத்தர்களை திறமை அடிப்படையில் பதவியுயர்துவதன் மூலம் இலங்கை நிருவாக சேவையின் வகுப்பு 11 தரம் 11 இற்கு நியமிப்பதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சை 2007 ஆம் ஆண்டின் பின்னர் இரத்துச்செய்யப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி போட்டிப் பரீட்சை இரத்துச் செய்யப்பட்டமையினால் –

(i) திறமை அடிப்படையில் உயர் தரத்துக்குச் செல்வதற்கிருந்த வாய்ப்பை மேற்படி உத்தியோகத்தர்கள் இழக்கின்றனரென்பதையும்;

(ii) முகாமைத்துவ உதவியாளர் உயர் வகுப்பு உத்தியோகத்தர்கள் உட்பட சம்பந்தப்பட்ட பல சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கடும் விரக்தி நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி போட்டிப் பரீட்சையை இரத்துச் செய்வதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) அதனை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா என்பதையும்;

(iii) ஆமெனில் அத்திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1592/ '11

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) அம்பாந்தோட்டை ரண்மினிதென்ன சினிமாக் கிராமத்தை நிர்மாணிக்க தாங்கியுள்ள மொத்தச் செலவினம் யாதென்பதையும்;

(ii) தற்போதைய அந்த கிராமத்தைப் பயன்படுத்தி நிறைவுசெய்யப்பட்டுள்ள படைப்புகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) கலைஞர்களின் படைப்புருவாக்கத்தின் பொருட்டு மேற்படி கிராமத்தை அவர்களுக்கு வழங்கும் போது பணம் அறவிடப்படுகிறதா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், இன்றளவில் அதனூடாகச் சம்பாதித்துள்ள வருமானம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ரண்மினிதென்ன கிராமத்தின் பராமரிப்புப் பணிகளுக்காகவிருக்கும் ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அதன் நிருவாகம் மற்றும் பராமரிப்பிற்காக மாதாந்தம் ஏற்படும் செலவினம் யாதென்பதையும்;

(iii) மேற்படி கிராமத்தைப் பயன்படுத்தும்போது பொருளாதார நெருக்கடிகளைக் கொண்டுள்ள கலைஞர்களுக்கு வழங்கப்படும் விசேட சலுகைகள் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1661/ '11

கௌரவ ஈ. சரவணபவன்,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) யாழ்ப்பாண மாவட்டத்தின் நாகர்கோவில் பிரதேசத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில் மேற்படி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மூலமாக நன்மை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை யாது;

(iii) 2010 ஆம் ஆண்டுக்கான பொருளாதார முன்னேற்ற அறிக்கைக்கிணங்க நாகர்கோவில் வர்த்தக பல்கூட்டுத்தொகுதியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட 5.8 மில்லியன் ரூபாவுக்கு என்ன நேர்ந்தது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1667/ '11

கௌரவ ரீ. ரஞ்சித் த சொய்சா,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) சுதந்திரத்தின் பின்னர் இலங்கையில் இயங்கிவந்த வெளிநாட்டு வானொலி சேவைகள் யாவையென்பதையும்;

(ii) அவற்றின் மூலம் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட தாக்கங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வானொலி சேவைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில் அதன் பொருட்டு செயற்பட்ட அரசாங்கம் யாதென்பதையும்;

(v) மேற்படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ஆண்டுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்வரும் காலத்தில் வெளிநாட்டு வானொலி சேவைகளை இலங்கையில் பேணிவருவதற்கு அனுமதி வழங்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், எந்த அடிப்படையில் அத்தகைய அனுமதி வழங்கப்படும் என்பதையும்;

(iii) அத்தகைய அடிப்படையிலிருந்து செயற்படுவதன் மூலம் அடைவதற்கு எதிர்பார்க்கின்ற நோக்கங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1672/ ’11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் உயர் கல்வித்துறையின் தரத்தை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இந்த நடவடிக்கைகளினூடாக உயர் கல்வி பெறும் மாணவ, மாணவிகளுக்கு கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) உயர் கல்வித்துறையின் தரத்தை முன்னேற்றுவது தொடர்பாக எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்பார்த்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1683/ ’11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் சிவில் விமான சேவைகள் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1695/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கின் புகையிரத வீதிகளை நிர்மாணிப்பதற்காக நடைமுறைப் படுத்தப்பட்ட 'உத்துரு மித்துரு' கருத்திட்ட நடவடிக்கைகளின் பொருட்டு போக்குவரத்து அமைச்சு தலையீடு செய்ததா;

(ii) இக்கருத்திட்டத்தின் நோக்கம் யாது;

(iii) இக்கருத்திட்டத்தினால் நிறைவேற்ற வேண்டியிருந்த பணிகள் யாவை;

(iv) இதற்குத் தேவையான நிதியைப் பெறுகின்ற முறை யாது;

(v) வடக்கின் புகையிரத வீதிக் கருத்திட்டத்தின் கீழ் இதுவரை நிறைவேற்றப் பட்டுள்ள பணிகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1721/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சுக்குரிய நியதிச்சட்ட சபைகள் மற்றும் கூட்டுத்தாபனங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள உப தலைவர்கள் யார்;

(ii) மேற்படி உப தலைவர்களை நியமித்த அதிகாரி யார்;

(iii) உப தலைவர்களின் கல்வித் தகமைகள் மற்றும் தொழில் அனுபவங்கள் யாவை;

(iv) அந்த ஒவ்வொரு உப தலைவருக்கும் செலுத்தப்படும் சம்பளம் அல்லது கொடுப்பனவுகள், வழங்கப்பட்டுள்ள தொலைபேசி, வாகன வசதிகள் உள்ளிட்ட வசதிகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபையில் குறிப்பபிடுவாரா

(ஆ) இன்றேல், ஏன்?

1875/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குளியாபிட்டி ஆதார வைத்தியசாலையின் வாகனத் தரிப்பிடத்தை நிர்வகிப்பதற்காக தகுதியானவர்களை தெரிவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறையொன்று பின்பற்றப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனின் மேற்படி கேள்விப்பத்திரத்தை அளிப்பதற்கு ஏற்புடைய நிபந்தனைகள் யாவை என்தையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வைத்தியசாலையின் வாகனத் தரிப்பிடத்தின் நிர்வாகத்தை பெற்றுக் கொண்டுள்ள கேள்விப்பத்திரதாரரினால் மோட்டார் சைக்கிளொன்றை தரித்து நிறுத்துவதற்கு அறவிடப்படும் கட்டணம் எவ்வளவென்பதையும்;

(ii) வாகனத்தரிப்பிடத்தில் பணம் அறவிடலுக்காக அங்கீகரிக்கப்பட்ட பணம் ஏற்கும் பற்றுச்சீட்டு வழங்கப்படுகின்றதாவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) வைத்தியசாலையில் தங்கயிருந்து சிகிச்சை பெறும் நோயாளி ஒருவரை பார்வையிடுவதற்கு வாகனமொன்றில் ஒரு நாளில் மூன்று தடவைகள் வரும் நபரொருவரிடமிருந்து மூன்று தடவைகளிலும் ஒரே விடயத்திற்காக பணம் அறிவிடுவது நியாயமற்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

1916/ '11

கௌரவ அஜித் பீ.பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மில்லனிய பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பாடசாலைகளில் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) க/ தொம்பகொட சீலரதன மகா வித்தியாலயம் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காகத் தெரிவு செய்யப்படுவதற்கு தகுதியானதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) ஆமெனில் அப் பாடசாலையை குறிப்பிட்ட கருத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1991/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) '21 வயதுக்குக் குறைந்த ஆட்களுக்கு சிகரட் விற்பனை செய்வதை அரசாங்கம் தடை செய்துள்ளது' என்ற அறிவூட்டல் விளம்பரங்கள் வர்த்தக நிலையங்களிலும் உணவகங்களிலும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) எனினும் மன்னார் பிரதேச வர்த்தக நிலையங்களிலும் உணவகங்களிலும் 18 வயதுக்குக் குறைந்த ஆட்களுக்கு சிகரட் விற்கப்படுகின்றமை தொடர்பாக முறைபாடுகள் கிடைத்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்விடயத்தை மேற்படி பிரதேச பொது சுகாதார பரிசோதகரின் கவனத்துக்குக் கொண்டுவந்து, சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனத்துக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2046/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கமநல சேவை நிலையமொன்றினால் விவசாயிகளுக்கு வழங்கப்படும் சேவைகள் யாவை என்பதையும்;

(ii) கமநல சேவை நிலையங்கள் அனைத்திலும் கமநல வங்கிகள் தாபிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) 2010ஆம் ஆண்டினுள் கமநல வங்கிகள் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2058/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) முகாமைத்துவச் செயற்பாடுகள் இலங்கை மத்திய வங்கியின் நிதி சபையினால் பொறுப்பெடுக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) ஊ.சே.நிதியத்தின் நிதி முகாமைத்துவம் நிதிச் சபையின் அங்கீகாரத்துடன், முதலீட்டுக் கொள்கைக் கூற்றின் பிரகாரம், முதலீட்டுக் குழுவின் பணிப்பில் நடத்தப்படுகிறதா என்பதையும்;

(ii) ஊ.சே.நி. திணைக்களத்தின் நிதி முகாமைத்துவப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டு முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ய ஒழுங்குக் கிரமமாக முதலீட்டு சபை கூடுகிறதா என்பதையும்;

(iii) ஊ.சே.நி. முதலீட்டுக் கொள்கையின் பிரகாரம் முதலீட்டுத் தீர்மானங்கள் எடுக்கப்படுகிறதா என்பதையும்;

(iv) கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான முதலீட்டுக் குழு கூட்ட அறிக்கைகள் சபாபீடத்தில் இடப்படுகின்றனவா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) கடந்த இரண்டு வருடங்களாக முதலீட்டுக் குழு தொடர்பாக,

(i) அதன் எல்லா உறுப்பினர்களினதும் பெயர், நியமனத்திகதி ஆகியவற்றையும்;

(ii) கூட்டம் நடந்த திகதிகளை சமூகமளித்த உறுப்பினர்களின் பெயர்களுடனும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2012 பெப்புருவரி 22, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1410/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசுக்கும் தனியார் துறைக்கும் சொந்தமான, செயற்படும் எல்லாத் துறைமுகங்களின் பெயர்களையும்;

(ii) அரசாங்கத்தாலும் தனியார் துறையினராலும் செயற்படுத்தப்படவிருக்கும் இலங்கை துறைமுகங்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) கொள்கலன்கள் மற்றும் பருமக்கூறுகள் (break bulk) என்பவற்றின் அடிப்படையில் எல்லாத் துறைமுகங்களினதும் முழுமையான செயற்பாட்டு இயலுமையையும்;

(ii) ஒவ்வொரு துறைமுகத்தின் உண்மையான கையாளும் இயலுமையை அதன் மொத்த இயலுமையின் நூற்றுவீதமாகவும்;

(iii) துறைமுகங்களின் மிகையான இயலுமைகள் எவ்வாறு கையாளப்படவுள்ளன என்பதனையும்

அவர் தனித்தனியாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (i) இன் பிரகாரம் ஒவ்வொரு துறைமுகத்தின் பணியாட்களின் எண்ணிக்கையை தனித்தனியாகவும்;

(ii) இறுதியாக அவர்களுக்கு செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் வேதனங்களின் மொத்தத்தையும்

அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1498/ '11

கௌரவ அஜித் குமார,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1570/ '11

கௌரவ புத்திக பத்திரன,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை மாவட்டத்தின் தெனியாய வலயக் கல்வி காரியாலயத்தின் மூலம் நிர்வகிக்கப்படுகின்ற மாற/களுபோவிட்டியன மகா வித்தியாலயத்தின் சில கட்டிடங்கள் மிகவும் மோசமாக சேதமாகியுள்ளதென்பதையும்;

(ii) இப்பாடசாலையின் மாணவர்கள் மேற்படி சேதமடைந்துள்ள கட்டிடங்களில் மிக ஆபத்தான நிலையின் கீழ் கல்வி பயில்கின்றார்கள் என்பைதயும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கட்டிடத்தை திருத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) அதற்கு தேவையான நிதி தற்போது ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், இப்பணத்தொகை எவ்வளவென்பதையும்;

(iv) நிதி ஒதுக்கப்பட்டிருப்பின் அதன் திருத்த நடவடிக்கைகள் எத் திகதியில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1674/ ’11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் கைத்தொழில் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) இத்துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1684/ ’11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் காணித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் காணித்துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1690/ ’11

கௌரவ (வண) எல்லாவல மேதானந்த தேரர்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் சுற்றாடலைப் பேணுவதற்காக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) அவ்வாறான கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) சுற்றாடலைப் பேண எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1696/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தாண்டிகுளத்திலிருந்து ஓமந்தை வரையிலுள்ள புகையிரத வீதியின் தூரம் எத்தனை கிலோமீட்டர்களென்பதையும்;

(ii) மேற்படி புகையிரத வீதியை புனரமைக்கின்ற கம்பனி யாதென்பதையும்;

(iii) அவ்வீதியின் புனரமைப்புப் பணிகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அதற்காக செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இக் கௌரவ சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1722/ '11

கௌவரவ தயாசிறி ஜயசேகர,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சினால் அல்லது அந்த அமைச்சுக்குரிய நிறுவனங்களால் தேசிய வீடமைப்புக் கீதமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா;

(ii) அந்தக் கீதத்தை எழுதிய, மெட்டமைத்த, இசை அமைத்த, அதனைப் பாடிய, மற்றும் பாடல் காட்சிகளை அமைத்த கலைஞர்கள் யார்;

(iii) அந்தக் கீதத்தை உருவாக்குவதற்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iv) அந்தப் பணம் செலவிடப்பட்ட செலவுத் தலைப்பு யாது

என்பதை அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1909/ '11

கௌரவ ரஞ்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புகளுக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குச் செல்கின்ற பெரும்பாலான ஊழியர்களுக்கு அந்நாடுகளில் அமுலில் உள்ள ஷரிஆ சட்டம் மற்றும் ஏனைய சட்டங்கள் தொடர்பான அறிவு இல்லை என்பதையும்;

(ii) இதன் காரணமாக, வெளிநாட்டுத் தொழில்களில் ஈடுபடும்போது இவர்களுக்கு பல்வேறு சிக்கல்களுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மத்திய கிழக்கு நாடுகளின் சட்டங்கள் தொடர்பில் அறிவின்மை காரணமாக அந்நாடுகளின் சட்டங்களின் கீழ் குற்றவாளியாக்கப்படுகின்ற இலங்கை ஊழியர்களுக்கு சட்ட உதவி வழங்கும் வேலைத்திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், அவ்வாறான வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்தி மேற்படி ஊழியர்கள் எதிர்நோக்குகின்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அத்தகைய வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்துகின்ற திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1917/ '11

கௌரவ அஜித் பீ. பெரேரா,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பண்டாரகம பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பாடசாலைகளில் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகள் யாவை என்பதையும்;

(ii) க/ வெவிட்ட மைத்திரி மகாவித்தியாலயம் "இரண்டாம் நிலை பாடசாலைகள் 1000" கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1992/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம்.அஸ்வர்,— மின்வலு, எரிசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யாழ்ப்பாணம் வடமராச்சி பிரதேச செயலாளர் பிரிவில் மணல்காடு எனும் பிரதேசத்தில் வசிக்கும் மக்களுக்கு இதுவரையில், மின்சார வசதி வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) இதுதொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர், வடமாராச்சி பிரதேச செயலாளர் மற்றும் இலங்கை மின்சார சபைக்கு அப்பிரதேச மக்கள் மனுக்களை சமர்ப்பித்துள்ளனர் என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட பிரதேசத்துக்கு மின்சாரம் வழங்குவதற்காக, மின் கம்பங்கள் நடப்பட்டு நான்கு மாதங்களுக்கு மேல் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரையில் மின் கம்பிகள் இணைக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மணல்காடு பிரதேச மக்களின் நன்மையைக் கருதி இவர்களுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2002/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) புத்தளம் கற்பிட்டி வீதியின் 7 ஆம் மற்றும் 9 ஆம் மைல் கல்களுக்கிடையிலுள்ள நெடுஞ்சாலைக்கும் புத்தளம் கடனீரேரிக்கும் இடையே அமைந்துள்ள நிலப்பகுதியிலிருந்த கண்டல் தாவர நடுகைகளை சிலர் அழித்துள்ளனரென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கண்டல் தாவர நடுகை அமைந்திருந்த நிலப்பகுதி ஏதேனும் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தும் பொருட்டு பயன்படுத்தப் படுகின்றதா என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குகின்றவர்கள் யாரென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்குரிய நிலப்பகுதியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குவதற்காக பெறப்பட்டுள்ள சட்ட ரீதியான ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(v) வடமேல் மாகாண சுற்றாடல் நியதிச் சட்டங்களுக்கு அமைவாக மேற்படி கருத்திட்டத்திற்கு பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையொன்று பெறப்பட்டதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2048/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மாகாணத்தில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களின் கீழுள்ள குடும்ப சுகாதார சேவைகள் பிரிவின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி அனைத்து குடும்ப சுகாதார சேவைகள் பிரிவுகளுக்கும் குடும்ப சுகாதார சேவைகள் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2059/ '11

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேற்பதற்கு,— (1)

(அ) (i) பழைய நுகேகொட 'ஜனதாபொல' இடிக்கப்பட்டபோது, அதிலிருந்து வியாபாரிகளை அகற்றுவதற்கும் பின்பு 2011 ஒற்றோபர் முதல் வாரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட 'ஜனதாபொலவில்' கடைகளை கொடுக்க வியாபாரிகளைத் தெரிவு செய்வதற்கும் கைக்கொள்ளப்பட்ட முழுமையான நடைமுறைகளையும் என்ன என்பதையும்;

(ii) வியாபாரிகளை அகற்றல், புதிய கடைகளை ஒதுக்கிக் கொடுத்தல் தொடர்பான செயற்பாடுகளுக்குப் பொறுப்பாக இருந்த ஆட்களின் பெயர்களையும்;

(iii) வியாபாரிகளை அகற்றல், புதிய கடைகளை ஒதுக்கிக் கொடுத்தல் தொடர்பான செயற்பாடுகள் இடம்பெற்ற திகதிகளையும்;

(iv) (அ)(i) இன் பிரகாரம் அகற்றப்பட்ட வியாபாரிகள் மற்றும் அளவு, கட்டிடம் உள்ள கடைகள், கட்டிடம் இல்லாது நிலம் குறிக்கப்பட்ட கடைகள் என்ற அடிப்படையில் கடை கொடுக்கப்பட்ட வியாபாரிகளின் எண்ணிக்கை, பெயர், முகவரியையும்

அவர் தனித்தனியாகக் கூறுவாரா?

(ஆ) (i) அகற்றப்பட்ட, இருத்தப்பட்ட வியாபாரிகள் என்ற இரு பட்டியல்களிலும் முரண்பாடுகள் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறாயின் முரண்பாட்டைத் திருத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1411/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக் சதோசவின் ஆரம்பக் கட்ட பணிப்பாளர்களின் பெயர்களையும்;

(ii) தற்போதைய பணிப்பாளர் சபையிலுள்ள பணிப்பாளர்களின் பெயர்களையும்;

(iii) நிதியமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர்களின் பெயர்களையும்;

(iv) லக் சதோசவின் கணக்காய்வாளர்கள் மற்றும் கம்பனிச் செயலாளர்களின் பெயர்களையும்

அவர் கூறுவாரா?

(ஆ) லக் சதோசவின் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இற்றைவரைக்கும் அதன் வருடாந்த பொதுக்கூட்டங்கள் எப்போது நடைபெற்றன என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) ஏனைய பல்பொருள் அங்காடிச் சந்தைகளோடு ஒப்பிடுமிடத்து லக் சதோசவின் சந்தைப் பங்கு எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# 2012 பெப்புருவரி 23, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1412/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாட்டிற்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்கும் ஒரே கூரையின் கீழான வர்த்தகமாக முதலீட்டுச்சபை தற்போதும் உள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு, 17 ஆம் பிரிவு ஆகியன யாவை என்பதையும்;

(iii) 16ஆம் பிரிவு, 17ஆம் பிரிவு ஆகியவற்றைத் தவிர வேறு ஏதாவது மூலப்பிரமாணங்கள் உள்ளனவா என்பதையும்;

(iv) முதலீட்டிற்கான விண்ணப்பம் ஒன்றிற்கு அங்கீகாரம் வழங்குவதற்கு எடுக்கும் காலத்தையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) தற்போதைய முதலீட்டுச்சபை;

(ii) முதலீட்டு மதிப்பீடுகள், அங்கீகாரங்கள், முதலீட்டு கண்காணிப்புகள் போன்றவற்றில் ஈடுபட்டுள்ள பிரதான நபர்கள் ஆகியவை பற்றி அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2000 - 2004, 2005 - 2009, 2010 ஆம் வருடம், 2011முதல் இற்றை ஆகிய காலப்பகுதிகளில்,

(i) முதலீட்டுச்சபை மூலம் உண்மையாக நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட முதலீடுகள்;

(ii) அவற்றில், உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான முதலீடுகள்;

(iii) முதலீட்டுச்சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட முதலீட்டிற்கான விண்ணப்பங்கள்;

(iv) முதலீட்டுச்சபைச் சட்டத்தின் 16ஆம் பிரிவு மற்றும் 17ஆம் பிரிவு ஆகியவற்றின் கீழ் உருவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்ட முதலீடுகளின் பெறுமதி மற்றும் தொழில்வாய்ப்புக்கள்

ஆகியவற்றை அவர் வெவ்வேறாகக் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1499/ '11

கௌரவ அஜித் குமார,— இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இளைஞர் அலுவல்கள், திறன் அபிவிருத்தி அமைச்சில் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1572/ '11

கௌரவ புத்திக பத்திரன,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சுனாமியினால் வீடுகளை இழந்த குடும்பங்களுக்கு காலி மாவட்டத்தின் அஹங்கம, தித்தகல்ல பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 'சுமிதுறு' வீடமைப்புக் கருத்திட்டத்திற்கு நிதி ஏற்பாடுகளை வழங்கிய நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நிறுவனம் வழங்கிய பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் வீடுகள் உரிய தரத்திற்கமைவாக நிர்மாணிக்கப் படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) மேற்படி வீடுகளை உரிய தரத்திற்கமைவாக அமைத்துக் கொடுப்பதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்,

(ii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1675/ '11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிர்மாணத் துறையில் நடைமுறைப் படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் மக்களுக்குக் கிடைத்துள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்;

(iii) நிர்மாணத் துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) இவற்றின் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1724/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மத்திய வங்கியில் இன்டஸ்ரியல் பினான்ஸ் லிமிட்றட் (Industrial Finance Limited) என்ற பெயரில் வங்கியல்லாத நிதி நிறுவனமொன்று பதிவுசெய்யப்பட்டுள்ளதா;

(ii) அது பதிவுசெய்யப்பட்ட திகதி யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் நிதித்துறையில் அவர்களது அனுபவங்கள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் குறிப்பபிடுவாரா?

(ஆ) (i) இந்த கம்பெனி இதற்கு முன்னர் வேறு கம்பனியொன்றுக்கு சொந்தமாக இருந்ததா;

(ii) அவ்வாறெனின் அந்த கம்பனியின் பெயர் யாது;

(iii) அதன் தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை

என்பதை அவர் இச்ச சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) I.F.L கம்பனியில் தற்போதுள்ள வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) அதில் பணம் வைப்பிலிட்டுள்ள வைப்பாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு;

(iii) 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு அந்த கம்பனிக்கு உரித்தாக இருந்த வைப்புகளின் பெறுமதி எவ்வளவு

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1687/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பெருந்தோட்டத் துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1728/ '11

கௌரவ அநுர திசாநாயக்க,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக்கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்ஓவிட்ட மீன்பிடித் துறமுகம் நிர்மாணிக்கப்பட்டமையால் வீடுகளை இழந்தோரின் எண்ணிக்கை யாது;

(ii) இவர்களுக்கு நட்டஈடுத் தொகை வழங்கப்பட்டதா;

(iii) அவ்வாறாயின் ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்ட நட்டஈட்டுத் தொகை வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இம்மீன்பிடித் துறைமுகத்தை நிர்மாணிக்கின்றபோது வீடுகளை இழந்தோருக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறாயின் இவ்வீடுகளை நிர்மாணித்த கம்பனி யாது;

(iii) இக்கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாது;

(iv) ஒவ்வொரு வீட்டினதும் பரப்பளவு மற்றும் நிர்மாணிப்பதற்கு செலவாகிய பணத் தொகை யாது;

(v) அமைக்கப்பட்ட வீடுகள் வெடிப்புக்களுக்கும் மூழ்குதல்களுக்கும் உள்ளாகியுள்ளதா;

(vi) அவ்வாறாயின் இந்நிலைமையை சீர்செய்ய மேற்கொள்ளப்படும் தீர்வுகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1918/11

கௌரவ அஜித் பீ .பெரேரா,— கூட்டுறவு, உள்ளக வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) பண்டாரகம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்திலிருந்து மற்றும் அதுனுடன் இணைந்த கூட்டுறவு கிராமிய வங்கியிலிருந்து கடன் பெற்று, 2011.05.01 ஆந் திகதியாகும் போது அக் கடனை செலுத்தத் தவறியுள்ளவர்களின் பெயர்கள் மற்றும் ஒவ்வொருவரினாலும் செலுத்தப்படாததுள்ள பணத் தொகைகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) செலுத்தத் தவறியுள்ள மேற்படி கடன் தொகையை மீள அறவிடுவதற்காக பண்டாரகம பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(ii) அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2003/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) வில்பத்து தேசிய வனப் பூங்காவின் இடைத்தடுப்பு வலயத்தில் கலா ஓயாவை அண்மித்த மொரடவில்லு, தவுசமடம் ஆகிய பிரதேசங்களில் உள்ள பெருமளவு ஏக்கர் வனத்தை வெட்டித் துப்புரவாக்கி கமத்தொழில் கருத்திட்டங்களுக்காக வழங்குகின்ற வேலைத்திட்டமொன்று அமுலில் உள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்திற்காக வெட்டித் துப்புரவாக்கப்பட்ட காணி உரித்தாயுள்ள மாவட்டம் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தை அமுலாக்குகின்றவர் யாரென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்திற்காக வனப்பகுதியை அண்மித்ததாக வெட்டித் துப்புரவாக்கப்பட்ட நிலப்பகுதியின் பரப்பளவு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) அவ்வாறான கருத்திட்டமொன்றை அமுலாக்குவதற்குத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அவை யாவை என்பதையும்;

(iii) ஒரு ஹெக்றயாருக்கு மேற்பட்ட நிலப் பரப்பொன்றைத் துப்பரவு செய்து அபிவிருத்திக் கருத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுச் செயற்பாட்டின் கீழ் பெறப்படவேண்டிய பூர்வாங்க சுற்றாடல் அங்கீகாரம் இக் கருத்திட்டத்திற்கு பெறப்பட்டதா என்பதையும்

அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2010/ '11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ. எச். எம். அஸ்வர்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஹங்குரன்கெத்த பிரதேசத்தில் "ஜனசெவன" வீடமைப்புக் கிராமங்களை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டமொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதன்கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள வருடம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2049/ '11

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வட மாகாணத்தில் உள்ள அனைத்து குடும்ப சுகாதார சேவைகள் பிரிவுகளிலும் சுகாதார மத்திய நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) இன்றேல், சுகாதார மத்திய நிலையங்களை கொண்டிராத குடும்ப சுகாதார சேவைகள் பிரிவுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போது சுகாதார மத்திய நிலையங்களை கொண்டிராத பிரிவுகளுக்கு சுகாதார மத்திய நிலையங்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1413/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில் ஒவ்வொரு நாடும் இலங்கையில் மேற்கொண்ட மொத்த முதலீட்டினை வெவ்வேறாகவும்;

(ii) நாடு மற்றும் கம்பனி வாரியாக இம் முதலீடுகளின் மூலம் உருவாக்கப்பட்ட தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையை வெவ்வேறாகவும்;

(iii) அவற்றில் தற்போதும் நடைமுறையில் உள்ள தொழில்வாய்ப்புகளின் எண்ணிக்கையையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிடப்பட்ட முதலீடுகளின் மொத்த ஏற்றுமதி இயலளவையும்;

(ii) நாடு மற்றும் கம்பனி வாரியாக 2009, 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களுக்கான உண்மையான ஏற்றுமதி அளவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) 2009, 2010 மற்றும் 2011 ஆகிய வருடங்களில்,

(i) நாடு மற்றும் கம்பனி வாரியாக மேற்படி (அ) (i)இல் உள்ள முதலீடுகள் மூலமாகப் பதிவுசெய்யப்பட்ட மொத்த பெறுமதி சேர்ப்பனவு யாதென்பதையும்;

(ii) மேற்படி கம்பனிகளால் செலுத்தப்பட்ட வரித்தொகை யாதென்பதையும்

வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1500/ '11

கௌரவ அஜித் குமார,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சின் கீழ் தற்போது சேவையாற்றுகின்ற ஆலோசகர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) இவர்களின் பெயர்கள், கல்வித் தகைமைகள் மற்றும் பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) இவர்களுக்கு செலுத்தப்படும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்;

(iv) கடந்த மாதத்திற்காக செலுத்தப்பட்ட அனைத்து கொடுப்பனவுகளினதும் கூட்டுத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உத்தியோகபூர்வ வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள், வழங்கப்பட்டுள்ள வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் விபரங்கள் யாவையென்பதையும்;

(ii) இவர்களுக்கு எரிபொருள் கொடுப்பனவு வழங்கப்படும் எனின், ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்படுகின்ற எரிபொருள் கொடுப்பனவு தனித்தனியாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) இவர்களுக்கு தொலைபேசி வசதிகள் வழங்கப்படுமெனின், தற்போது தொலைபேசி வசதிகள் வழங்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(ii) தொலைபேசிக் கொடுப்பனவுத் தொகையொன்று வழங்கப்படுமெனின் ஒவ்வொரு ஆலோசகருக்கும் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுத் தொகை தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1573/ '11

கௌரவ புத்திக பதிரண,— உள்ளுராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் பிரதேச சபையினால் இற்றைக்கு ஒரு வருடத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட, வெல்லவ பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டம், இன்றுவரை வெறுமனே பெயர்பலகைக்கு மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) வெல்லவ பொது விளையாட்டு மைதானத்தை அபிவிருத்தி செய்யும் பணி இடைநிறுத்தப்படுவதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தின் அபிவிருத்திப் பணிகள் எத்தேதியில் ஆரம்பிக்கப்படும் என்பதையும்;

(iii) இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1809/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— அரச வளங்கள், தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கந்தளாய் சீனித் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கந்தளாய் சீனித் தொழிற்சாலைக்கு உரித்தாயுள்ள நிலப்பரப்பு யாது என்பதையும்;

(ii) மேற்படி நிலப்பரப்பில் விற்பனை செய்யப்பட்டுள்ள அல்லது குத்தகைக்கு விடப்பட்டுள்ள அளவு யாது என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் வழங்கப்பட்டுள்ள கால எல்லை யாது என்பதையும்;

(iv) மேற்படி காணிகளை கொள்வனவு செய்த அல்லது குத்தகைக்குப் பெற்றுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்கள் உரித்தாயுள்ள நாடுகள் யாவை என்பதையும்;

(vi) விற்பனை செய்ததன் மூலம் அல்லது குத்தகைக்கு வழங்கியதன் மூலம் மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திலிருந்தும் பெற்றுக் கொண்ட பணத்தொகை வெவ்வேறாக யாது என்பதையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2012 பெப்புருவரி 24, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1414/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சாத்தியமான முதலீட்டாளர்களுக்கு இலங்கை முதலீட்டுச் சந்தையை அறிமுகப்படுத்தும் பொழுது பயன்படுத்தப்படும் தனித்துவமான விற்பனைத் திட்டங்களையும்;

(ii) உற்பத்திச் செலவினத்தின் அடிப்படையிலான எமது உழைப்பின் போட்டித்தன்மையை இந்தியா, இந்தோனேசியா, பங்காளதேசம், சீனா, வியட்நாம் மற்றும் கம்போடியா ஆகிய நாடுகளுடன் ஒப்பீட்டளவில் தொழிலாளர் செலவுகளின் போட்டித்தன்மையை மாதமொன்றுக்கான செலவின் அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (II) இல் குறிப்பிடப்பட்ட நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் சாத்தியமான ஓர் முதலீட்டாளருக்கு உரித்தான வரிச் சலுகைகளையும்;

(ii) இன்றுள்ளவாறாக, முதலீட்டாளர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் சேவை வழங்குவோர் ஆகியோருக்கு இலங்கையில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான வரிகளையும்;

(iii) இலங்கையில் முதலீடு செய்யும் இலங்கை முதலீட்டாளர் ஒருவருக்கு இன்றுள்ளவாறாக கிடைக்கும் வரிச் சலுகைகளையும் வரி விடுவிப்புக்களையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1538/ '11

கௌரவ அஜித் குமார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஹபராதூவ கல்வி வலயத்தில் திக்கும்புர மாதிரி கனிஷ்ட வித்தியாலயத்தில் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ஒவ்வொரு வருடத்தின் ஆரம்பத்திலும்,

(i) கல்விகற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் ஒவ்வொரு தரத்திலுமான மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iii) முதலாவது தரத்துக்கு விண்ணப்பித்த மாணவர்களின் எண்ணிக்கை

எவ்வளவு என்பதை வெவ்வேறாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி பாடசாலையில் 2003 தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில்,

(i) நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள்;

(ii) மேற்படி கருத்திட்டங்களுக்கு நிதி வழங்கிய நபர்கள் மற்றும் நிறுவனங்கள்;

(iii) அரச நிறுவனங்களினால் இப் பாடசாலைக்கு வழங்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

யாவை என்பதை வருடாந்த அடிப்படையில் வெவ்வேறாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1575/ '11

கௌரவ புத்திக பத்திரண,— வினைத்திறன் மேம்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2003ஆம் ஆண்டில் தொழில் உறவுகள், மனிதவலு அமைச்சில் 'ரெகியா பியச' எனும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது என்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள ஊழியர்கள் 2003 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிகிறார்கள் என்பதையும்;

(iii) தற்போது சில மாதங்களாக, மேற்படி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்த ஊழியர்களுக்கு விரைவாக சம்பளம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 'ரெகியா பியச'வின் கீழ் ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களை மனிதவலு, வேலைவாய்ப்புத் திணைக்களத்தில் இணைத்து, நிரந்தரமாக்குவதற்கான திட்டமொன்று உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த முறைமையியல் யாது என்பதையும்;

(iii) இணைத்துக்கொள்ளப்படுமாயின், அந்தத் திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1676/ '11

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் வர்த்தகத்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) வர்த்தகத்துறையில் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1688/ '11

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன,— பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2006ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையான காலப்பகுதியில் பாரம்பரிய கைத்தொழில்கள், சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி துறையில் நடைமுறைப்படுத்தப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இக்கருத்திட்டங்களினூடாக மக்களுக்குக் கிடைத்துள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில்முயற்சி அபிவிருத்தி துறையில் நடைமுறைப்படுத்த எதிர்பார்த்துள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iv) அவற்றிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற நன்மைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1729/ '11

கௌரவ அனுர திஸாநாயக்க,— கடற்றொழில்,நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) திக்ஓவிட்ட கடற்றொழில் துறைமுகத்தை அமைப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த அங்கீகாரம் கிடைத்த திகதி யாதென்பதையும்;

(iii) துறைமுகத்தை அமைப்பதற்காக நிதியை பெற்றுக்கொள்ளும் விதம் மற்றும் தேவையான மொத்தப் பணத் தொகை யாதென்பதையும்;

(iv) இதில் உதவியாக கிடைக்கும் பணத் தொகை மற்றும் கடனாக பெற்றுக்கொள்ளும் பணத் தொகை தனித்தனியே யாதென்பதையும்;

(v) பெறப்படும் கடன் தொகையின் வட்டி வீதம் மற்றும் மீளச் செலுத்த வேண்டிய காலம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கடற்றொழில் துறைமுகத்தின் நிர்மாணிப்புப் பணிகள் வழங்கப்பட்ட கம்பனி யாதென்பதையும்;

(ii) மேற்படி கம்பனி தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமையியல் யாதென்பதையும்;

(iii) கம்பனியை தேர்ந்தெடுக்கின்றபோது கேள்விப்பத்திரம் கோரப்பட்டிருப்பின், ஏனைய கம்பனிகள் முன்வைத்த விலைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1804/ '11

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— உள்ளூராட்சி, மாகாணசபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குளியாப்பிட்டிய, கோன்கஹகெதர தொடக்கம் பூகல்ல வரையிலான வீதியில் 'காபட்' இடுவதற்காக மதிப்பிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இந்த வீதியில் காபட் இடுவதற்கான கருத்திட்டத்தின் பொருட்டு கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(iii) ஆமெனில், இதற்காக கேள்விப்பத்திரங்களை முன்வைத்த ஒப்பந்தகாரர்கள் யாவர் என்பதையும்;

(iv) இந்த ஒவ்வொரு ஒப்பந்தகாரரினாலும் முன்வைக்கப்பட்ட விலைகள் தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1810/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுகளில், வெளிநாடுகளில் தூதுவர் சேவையின் முதலாவது செயலாளர் பதவிக்கு நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சைகள் நடத்தப்பட்டனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி பரீட்சைகள் நடத்தப்பட்ட கால எல்லை யாது என்பதையும்;

(iii) மேற்படி செயலாளர் பதவிக்கு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்காக பின்பற்றப்பட்ட முறைமையியல் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேலே (அ) (iii) இல் குறிப்பிடப்பட்ட முறைமையியலின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வருடத்திலும் முதலாவது செயலாளர் பதவிக்கான நியமனங்கள் வழங்கப்பெற்றவர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பதவிகளுக்காக வெளிநாட்டு சேவைக்குப் புறம்பாக நபர்கள் ஆட்சேர்க்கப்பட்டனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை யாது என்பதையும்;

(iv) அவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டவர்களின் தகைமைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) வெளிநாட்டு சேவைக்குப் புறம்பாக மேற்படி பதவிகளுக்கான நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டதா என்பதையும்;

(ii) இன்றேல்,வெளிநாட்டு சேவையில் ஈடுபட்டுள்ளவர்களை ஒர் அடிப்படையிலும், வெளியாட்களை வேறோர் அடிப்படையிலும் ஆட்சேர்ப்பதற்கான காரணம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1919/ '11

கௌரவ அஜித் பீ.பெரேரா,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011.09.01 ஆந் திகதியாகும் போது மரண தண்டணை விதிக்கப்பட்டு (சகல மேன்முறையீடுகளும் நிறைவடைந்துள்ள) சிறையிலடைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மேற்படி ஒவ்வொரு சிறைக்கைதிக்கும் மரண தண்டனை விதிக்கப்படுவதற்கு காரணமாயமைந்த அவர்களினால் செய்யப்பட்டுள்ள 'குற்றங்களின்' வகைகள் யாவை;

(iii) மேற்படி சிறைக்கைதிகளுக்குரிய மரண தண்டனை நிறைவேற்றப் படாமைக்கான காரணம் அல்லது காரணங்கள் யாவை

என்பதை அவர் இச் சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மரண தண்டனை விதிக்கப்பட்ட சிலருக்கு மன்னிப்பு வழங்கும் போது அரசினால் பின்பற்றப்படும் கொள்கை யாதென்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2011/ ’11

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) “ஜனசெவன” வீடமைப்புக் கருத்திட்டத்தின் கீழ் ஆதிவாசிகளுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறையிலுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இதன்கீழ் வீடுகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஆதிவாசி மக்கள் பிரிவுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வீட்டுத் தேவை உள்ளதென இனங்காணப்பட்டுள்ள ஆதிவாசிக் குடும்பங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) உரிய வீடுகளை ஆதிவாசிகளின் கலாசார தேவைகளின் பிரகாரம் நிர்மாணிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

2050/ ’11

கௌரவ சஜித் பிரேமதாச,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் கண் நோயாளர்களுக்கு அம்பாந்தோட்டை நகரில் தனியார் கண் பரிசோதனை நிலையங்களில் மூக்குக் கண்ணாடி மற்றும் விழி ஒட்டு வில்லைகளை பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அறிவுரை வழங்குகின்றார்கள் என்பதையும்;

(ii) மேற்படி நிலையங்கள் விழி ஒட்டு வில்லைகளை கூடிய விலைக்கு விற்பனை செய்கின்றன என்பதையும்;

(iii) வைத்தியசாலை உத்தியோகத்தர்களின் செயலால் அப்பாவி நோயாளர்கள் பல இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) கண் சிகிச்சைப் பிரிவில் நிலவும் மேற்படி நிலைமை குறித்து விஷேட விசாரணையை நடத்தி ஊழலை தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) வைத்தியசாலையில் வழங்கப்படும் பரிசோதனை அறிக்கைக்கு அமைவாக கண் நோயாளர்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட மூக்குக்கண்ணாடிகளையும் விழி ஒட்டு வில்லைகளையும் அரச மருந்தகத்தில் குறைந்த விலையில் கொள்வனவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பாரா என்பதையும்;

(iii) அரச மருந்தகத்தினால் வழங்கப்படும் விழி ஒட்டு வில்லைகளை பயன்படுத்தி நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வைத்தியசாலை அதிகாரிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iv) இதனுடன் தொடர்புடையதாக பிரச்சினைகள் தோன்றுமெனில் வைத்தியசாலையும் அரச மருந்தகமும் ஒன்றிணைந்ததான நிகழ்ச்சித் திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1519/ '11

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2010 மற்றும் 2011ஆம் ஆண்டுகளில்,

(i) பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சிற்குச் சொந்தமல்லாத கட்டிடங்களை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ எடுப்பதற்கு ஏற்பட்ட மொத்தச் செலவினையும்;

(ii) வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ எடுக்கப்பட்ட கட்டிடத்தின் ஒரு சதுர அடிக்கான செலவினையும்;

(iii) கட்டிடங்களின் குத்தகைக்கான கால அளவினையும்;

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே சொல்லப்பட்ட ஆண்டுகளில், பாராளுமன்ற அமைச்சு தொடர்பாக,

(i) அமைச்சுடன் தொடர்புடைய எந்தவொரு அமைப்பிற்கும் சொந்தமல்லாத வாகனங்களை வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ பெறுவதற்குச் செலவழிக்கப்பட்ட மொத்தச் செலவினையும்;

(ii) வாடகைக்கோ அல்லது குத்தகைக்கோ பெறப்பட்ட வாகனங்களின் மொத்த எண்ணிக்கையினையும்;

(iii) வெளிவளங்களிடமிருந்து பெறப்பட்ட ஏனைய சேவைகளையும்;

(iv) மேலே குறிப்பிடப்பட்ட வெளிவளச் சேவையினைப் பெறுவதற்கு ஏற்பட்ட செலவினையும்;

(v) வெளிவள அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்ட ஆட்களின் எண்ணிக்கையினையும்;

(vi) மொத்தப் பணியாளர் எண்ணிக்கையினையும்

அவர் வெவ்வேறாகக் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1576/ '11

கௌரவ புத்திக பதிரண,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தின் பெலிஅத்த பிரதேசத்தில் அமைந்துள்ள இஹல பெலிகல்ல கிராமிய ஆஸ்பத்திரியின் வெளி நோயாளர்கள் சிகிச்சை பெறும் கட்டிடம் பெருமளவு சிதைவடைந்துள்ளதென்பதையும்;

(ii) இந்த நிலைமையானது சிகிச்சை பெறுவதற்காக வருகின்ற நோயார்களினதும் பணியாட்டொகுதியினரதும் உயிருக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இக்கட்டிடத்தை மறுசீரமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(ii) இதற்காக நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பின், மறுசீரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1775/ '11

கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) காலி மஹமோதர வைத்தியசாலையில்,

(i) தொழிற்படு நிலையிலுள்ள வாட்டுகள் மற்றும் ஏனைய பிரிவுகள் யாவையென்பதையும்;

(ii) சுனாமி பேரிழிவினால் ஏற்பட்ட சேதங்கள் யாவையென்பதையும்;

(iii) நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வதற்குப் பொருத்தமான நிலைமை உள்ளதா என்பதையும்;

(iv) தற்போதைய இடத்தை மாற்றுவதற்கு தீர்மானித்திருப்பின் இதற்கமைவாக மேற்கொள்ளப்பட்டுள்ள மாற்று நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) கராபிட்டிய வைத்தியசாலைக்கு அண்மையில் மகப்பேற்று மற்றும் சிறுவர்களுக்கான வைத்தியசாலையொன்றை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருப்பின் அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்பதையும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை எவ்வளவென்பதையும், தற்போதைய முன்னேற்றம் யாதென்பதையும்;

(ii) வைத்தியசாலை திட்டமிடலின் பிரகாரம் அதில் அடங்கியுள்ள பிரிவுகள் பற்றிய விபரம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிப்பதற்கு,

(i) பணம் வழங்கிய அல்லது வழங்குவதற்கு எதிர்பார்க்கின்ற நபர்கள் அல்லது நிறுவனங்கள் யாதென்பதையும்;

(ii) தற்போது வழங்கப்பட்டுள்ள பணத்தொகை யாதென்பதையும்;

(iii) பணம் செலவழிக்கப்பட்டுள்ள விதம் யாதென்பதையும்;

(iv) செலவழிக்கப்படாது எஞ்சியுள்ள பணத்தொகை மற்றும், அப்பணத்தொகை செலவழிக்கப்பட்ட கருமங்கள் யாதென்பதையும்;

(v) தற்போது அரச நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருப்பின் அப்பணத்தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) மேற்படி வைத்தியசாலையை நிர்மாணிக்கின்றபோது நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், இது தொடர்பாக விசாரணை நடாத்தி உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

1811/ '11

கௌரவ தயாசிறி ஜயசேகர,— கால்நடை வளர்ப்பு, கிராமிய சனசமூக அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2004 ஆம் ஆண்டில் தேசிய கால்நடை வளர்ப்புச் சபையின் தவிசாளர், நிறைவேற்று பணிப்பாளர் அல்லது செயற்பாட்டுப் பணிப்பாளர் மற்றும் பணிப்பாளர் ஒருவர் பெற்ற சம்பளம், எரிபொருள் கொடுப்பனவு, தொலைபேசி கொடுப்பனவு, ஏனைய கொடுப்பவுகள், உபசரிப்புச் செலவினங்கள், மாதாந்த பணிப்பாளர் சபைக் கொடுப்பனவுகள் ஆகியன ஒவ்வொரு பதவிக்கும் ஏற்ப வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) 2004 ஆம் ஆண்டின் பின்னர் மேற்படி பதவிகளுக்கு ஏற்புடைய சம்பளங்கள் அல்லது ஏனைய கொடுப்பனவுகள் மாற்றமடைந்த வருடங்கள் யாவை என்பதையும்;

(iii) 2011 ஆம் ஆண்டில் மேற்படி பதவிகளுக்கு ஏற்புடையதான சம்பளங்களும் கொடுப்பனவுகளும் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 156/ '12

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ எம்.ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ கபீர் ஹசீம்

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— 2011 ஆண்டிற்கான கல்வி உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை பரிசீலித்து அவை செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டமை பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதாலும்;

பல்வேறு தரப்பினால் முரண்பாடான கூற்றுகள் வெளியிடப்படுவதனாலும், மேலும் பிரச்சினைகள் தொழில்நுட்பக் குழுவினால் ஏற்பட்டது என சில தரப்பினர் கூறுவதனாலும்;

பெறுபேறுகளை தேவையற்ற விதத்தில் அவசரமாக வெளியிட்டமை மீது இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆற்றலின்மைதான் பிரச்சினை என இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

பரீட்சை ஆணையாளர் அவரின் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளமையாலும்;

இவ்விடயத்தினை விசாரிப்பதற்கு சனாதிபதியே ஒரு ஆணைக்குழுவினை நியமதித்துள்ளதாலும்;

முழு மாணவ பரம்பரையின் எதிர்காலமே அபாயநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையினாலும்;

இதனால் கல்வி முறைமை மீதுள்ள நம்பிக்கை மோசமாகக் சீர்குலைந்துள்ளமையினாலும்; மேலும்

கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளமையினாலும்;

(அ) 'Z' புள்ளியின் முறைமையைப் பரீட்சிப்பதற்கும்;

(ஆ) இப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்ற காரணங்களைப் பரிசீலிப்பதற்கும்;

(இ) 2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளைச் செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கும்;

(ஈ) இவ்வாறான பிரச்சினைகள் எதிர்காலத்தில் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(உ) குழு அவசியம் எனக் கருதும் ஏனைய பரிகார நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாக இருப்பினும் குழுவானது இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறும் கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சிகளை வாய்மொழி மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறுவிதமாக உறுதிப்படுத்துவதற்கும் சாட்சிகளை விசாரணை செய்யும் நோக்கத்துக்காக குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் நிருவகிக்கும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த வல்லுனர்வுகளின் நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்கும்;

(உ) காலத்திற்கு காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அத்துடன் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது கூடுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.